**<u>நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வாணியம்பாடி, திருப்பத்தூர் மாவட்டம்</u>**

**<u>முன்னிலை</u> : திருமதி. கா. ஸ்ரீபதி, B.A., L.L.B.,**

நீதித்துறை நடுவர், வாணியம்பாடி.

2026ம் ஆண்டு மார்ச் மாதம் 27 ஆம் நாள் வெள்ளிக்கிழமை

<u>ஆண்டுப்பட்டிகை வழக்கு எண் 102/2025</u>

<u>CNR NO.TNTU09-001460-2025</u>

| வரிசை எண். | விளக்கம் | விவரங்கள் |
|---|---|---|
| 1. | குற்றமுறையிடுபவர் | அரசுக்காக காவல் உதவி ஆய்வாளர்,<br>வாணியம்பாடி கிராமி காவல் நிலையம்,<br>குற்ற எண். 172/2022 |
| 2. | எதிரிகள் | எ1. மஞ்சுநாதன் த/பெ. சக்திவேல்<br>எ2. கவிதா த/பெ. சக்திவேல்<br>எ3. பிரகாஷ் த/பெ. குமார் |
| 3. | குற்றம் | இ.த.ச பிரிவுகள் 294(b), 323, 506(1). |
| 4. | சம்பவம் நடந்த தேதி | 04.06.2022 |
| 5. | முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட நாள். | 07.06.2022 |
| 6. | எதிரிகள் கைது செய்யப்பட்ட நாள் மற்றும் பிணையில் சென்ற விபரம் மற்றும் நாள் | AB |
| 7. | குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள் | 22.04.2025 |
| 8. | கு.வி.மு.ச.பிரிவு 241-ன் கீழ் குற்றம் குறித்து வினவப்பட்ட நாள் | 30.07.2025 |
| 9. | கு.வி.மு.ச.பிரிவு 317-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை தவிர மற்ற மனுக்கள் தாக்கல் செய்யபட்ட விவரம் அதன் முடிவுகள். | 1.13.11.2025 குவிமுச.பிரிவு 320(2)-ன் கீழ் 3792/2025. |
| 10 | வழக்கின் சாட்சிகள் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட நாள் | அ.சா.1,அ.சா.2 -13.11.2025<br>அ.சா.3, அ.சா.4,அ.சா.5-25.03.2026 |
| 11 | எதிரிகளிடம் குற்றம் குறித்து கு.வி.மு.ச.313(1) (ஆ)-ன் கீழ் | 26.03.2026 |

| | | |
|---|---|---|
| | வினவிய நாள் | |
| 12 | எதிரிகள் மீது பிடியாணை வழங்கப்பட்ட நாள் மற்றும் திரும்ப பெறப்பட்ட நாள் | – |
| 13 | தீர்ப்பு பகரப்பட்ட நாள் | 27.03.2026 |
| 14 | தீர்வு | குவிமுச பிரிவு 248 (1) கீழ் விடுதலை. |

**<u>நீதித்துறை படிவம் எண்: 61</u>**

புகார்தாரர் : அரசுக்காக காவல் உதவி ஆய்வாளர், வாணியம்பாடி கிராமிய காவல் நிலையம்.

எதிரிகள் : எ1. மஞ்சுநாதன் த/பெ. சக்திவேல்
எ2. கவிதா த/பெ. சக்திவேல்
எ3. பிரகாஷ் த/பெ. குமார்

குற்றம் : இ.த.ச பிரிவுகள் 294(b), 323, 506(1).

முடிவு : இறுதியாக, அரசு தரப்பில் 1 மற்றும் 3ம் எதிரிகளுக்கு எதிரான இ.த.ச பிரிவுகள் 294(b), 323, 506(1) குற்றச்சாட்டுகள் ஆனது சந்தேகத்திற்கு இடம் இன்றி நிரூபிக்கப்படாததால் சந்தேகத்தின் பலன்களை எதிரிகளுக்கு அளித்து எதிரிகளை இவ்வழக்கில் இருந்து விடுதலை செய்வது நீதியின் நலனுக்கு உகந்தது என்று இந்த நீதிமன்றம் தீர்மானித்து எதிரிகளை வழக்கிலிருந்து குவிமுச பிரிவு 248 (1) கீழ் விடுதலை செய்து உத்தரவிட்டு தீர்ப்பளிக்கப்படுகிறது.

| வ. எண் | எதிரிகள் பெயர் | தந்தை/கணவர் பெயர் | சாதி (அ) இனம் | தொழில் | முகவரி | வயது |
|---|---|---|---|---|---|---|
| 1 | மஞ்சுநாதன் | சக்திவேல் | இந்து | கூலி | தேவஸ்தானம், வாணியம்பாடி | 26 |
| 2 | கவிதா | சக்திவேல் | இந்து | கூலி | தேவஸ்தானம், வாணியம்பாடி | 44 |
| 3 | பிரகாஷ் | குமார் | இந்து | கூலி | தேவஸ்தானம், வாணியம்பாடி | 25 |

| தேதி | | | | | | | தாமதம் (ம) அதன் விளக்கம் |
|---|---|---|---|---|---|---|---|
| குற்றம் | புகார் அறிக்கை | கைது செய்யப்பட்ட நாள் | பிணையில் சென்ற நாள் | விசாரணை யின் தொடக்கம் | விசாரணை யின் முடிவு | உத்தரவு | |
| 04.06.22 | 07.06.22 | AB | AB | 30.07.25 | 26.03.26 | 27.03.26 | – |

இவ்வழக்கானது 17.04.2025 அன்று இந்நீதிமன்ற கோப்பில் எடுக்கப்பட்டு 26.03.2026–ம் தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது குற்றமுறையிடுபவர் தரப்பில் கற்றறிந்த அரசு குற்றதுறை உதவி வழக்கறிஞர் நிலை 1 திருமதி.மகேஸ்வரி அவர்கள் ஆஜராகியும் எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.பூபதி, B.Sc.,B.Ed.,B.L., அவர்கள் ஆஜராகியும் இது நாள் வரை விசாரணை செய்தும் வழக்கின் சாட்சிகளின் சாட்சியங்கள் மற்றும் ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் இவ்வழக்கில் வழங்கிடும்

## தீர்ப்புரை

### 1. குற்ற இறுதி அறிக்கையின் சுருக்கம்:

இவ்வழக்கில் வாணியம்பாடி கிராமிய காவல் நிலைய சரகத்திற்குட்பட்ட பகுதியில் கடந்த 03.06.2022ம் தேதி இரவு 23.00 மணிக்கு புகார்சாட்சி சூரியாவும் அவருடைய தம்பி பார்த்திபனும் இருசக்கர வாகனத்தில், எதிரி 2 கவிதா என்பவரின் வீட்டை கடந்து செல்லும்போது புகார்சாட்சியையும் அவருடைய தம்பி பார்த்திபனையும் பார்த்து ஏன் இவ்வளவு வேகமாக போகிறீர்கள் என திட்டியதால் இருதரப்புக்கும் வாக்குவாதம் ஏற்பட்டதாகவும், இதன் தொடர்ச்சியாக 04.06.2022ஆம் தேதி மாலை சுமார் 16.30 மணிக்கு தேவஸ்தானம் கிராமத்தில் எதிரி 1 மஞ்சுநாதன் என்பவர் வீட்டினிடம் புகார்சாட்சியை ஏண்டா தேவிடியாபையா என் அம்மாவை திட்டினாய் என்று அசிங்கமாக திட்டியதாகவும், எதிரி 2 புகார்சாட்சியை இழுத்து கீழே தள்ளி கையால் அடித்தும், எதிரி 3 பிரகாஷ் ஓடி வந்து புகார்சாட்சியை கையால் அடித்து காலால் எட்டி உதைத்து சொற்பகாயம் ஏற்படுத்தியதாகவும், எதிரி 1 புகார்சாட்சியை பார்த்து ஆள்காட்டி விரலை காட்டி உன்னை ஒழிக்காமல் விடமாட்டேன் என

மிரட்டியுள்ளார். எனவே, எதிரிகளின் மீது இ.த.ச பிரிவுகள் 294(பி), 323, 506(i)–ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்ததாக வாணியம்பாடி கிராமிய காவல் உதவி ஆய்வாளர் எதிரிகள் மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. எதிரிகள் மீது முகாந்திர வழக்கு இருப்பதால் இவ்வழக்கானது இந்நீதிமன்றத்தால் இ.த.ச. பிரிவுகள் 294(பி), 323, 506(i)–ன் கீழ் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, எதிரிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. இந்த வழக்கில் எதிரிகள் ஆஜரானதும், இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணத்தின் நகல்கள் அனைத்தும் எதிரிகளுக்கு கு.வி.மு.ச. பிரிவு 207ன்படி இலவசமாக வழங்கப்பட்டது.

3. குற்றம்சாட்டப்பட்ட நபருக்கு போதிய கால அவகாசம் கொடுத்து, ஆவணங்களை பரிசீலித்தும் எதிரிகள் மீதான குற்ற செயல்களை விசாரிக்க போதுமான முகாந்திரம் இருந்த காரணத்தினால், 1ம் எதிரியின் மீது இ.த.ச. பிரிவுகள் 294(பி), 506(i)–ன் கீழும், 2ம் எதிரியின் மீது இ.த.ச பிரிவுகள் 323–ன் கீழும், 3ம் எதிரியின் மீது இ.த.ச பிரிவுகள் 323–ன் கீழ் குற்றச்சாட்டுகளை வனைந்து விளக்கிக் கூறி வினவியபோது, எதிரிகள் குற்றத்தை மறுத்துரைத்ததால் அரசு தரப்பு சாட்சிகள் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

4. அரசு தரப்பில் **அ.சா.1 முதல் அ.சா.5** வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளனர். மேலும், இவ்வழக்கின் திரு.வெங்கடேசன், உதவி ஆய்வாளர் அவர்களுக்கு பதிலாக வாணியம்பாடி கிராமிய காவல் நிலையத்தின் தற்போதைய காவல் உதவி ஆய்வாளர் திரு. ராமமூர்த்தி, ஆவணங்களின் அடிப்படையில் அ.சா.5 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். இதற்கு எதிரிகள் தரப்பில் எவ்வித ஆட்சேபனையும் இல்லை என தெரிவிக்கப்பட்டது. **அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.8** வரையிலான சான்றாவணங்கள் ஆகியவை குறியீடு செய்யப்பட்டுள்ளன.

**5. அரசு தரப்பு சாட்சியங்களின் மூலம் தெரியவரும் அரசுதரப்பு வழக்கின் சுருக்கம் :**

5(i) அ.சா.1 சூர்யா இவ்வழக்கு சம்பவத்தில் காயமுற்றவர் மற்றும் புகார்தாரர் ஆவார். அ.சா.1 சூர்யா சுமார் 4 வருடத்திற்கு முன்பு ஊரில் கங்கையம்மன் திருவிழா

கூட்டத்தில் யாரோ அடித்துவிட்டதில், முதுகில் காயம் ஏற்பட்டதால் வாணியம்பாடி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்ந்துள்ளார். வாணியம்பாடி அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் திரு. வெங்கடேசன், உதவி ஆய்வாளர் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த அ.சா.1 சூர்யா என்பவரை விசாரித்து அ.சா.ஆ.4 புகார் வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

5(ii) திரு. வெங்கடேசன், உதவி ஆய்வாளர் புகார் வாக்குமூலத்திற்கு ஏற்ப நிலைய குற்ற எண் 172/2022 இ.த.ச பிரிவுகள் 294(பி), 323, 506(1)–ன் கீழ் அ.சா.ஆ.5 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். பின்பு, அதே நாள் 07.00 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் அ.சா.4 ராஜேந்திரன் மற்றும் சிவக்குமார் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு அ.சா.ஆ.6 பார்வை மகஜர் மற்றும் அ.சா.ஆ.7 மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார்.

5(iii) பின்பு, அதே நாள் சாட்சிகள் அ.சா.1 சூர்யா, அ.சா.2 அம்மு, அ.சா.3 ரமேஷ், பார்த்திபன், பூபாலன், ஜெகன், பார்வை மகசர் சாட்சிகள் ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். இவ்வழக்கின் எதிரிகள் அனைவரும் மாண்புமிகு மாவட்ட அமர்வு நீதிமன்றம், வேலூரில் முன்பிணை பெற்றதால் கைது செய்யவில்லை. அ.சா.1க்கு சிகிச்சை அளித்த மருத்துவர் திரு. தன்வீர் அகமது என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து அ.சா.ஆ.8 விபத்துப் பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றிதழைப் பெற்றுள்ளார். பின்பு புலன் விசாரணை முடித்து எதிரிகள் மீது குற்றம் உண்மையென தெரியவந்ததால், எதிரிகள் மீது இ.த.ச சட்டப்பிரிவுகள் 294(பி), 323, 506(i)–ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

6. அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களில் இருந்தும் மற்றும் சான்றாவணங்களில் இருந்தும் குற்றம் சாட்டப்பட்ட நபருக்கு பாதகமாக அமைந்ததை சாட்சிய சூழ்நிலைகளை எதிரிகளிடம் குவிமுச பிரிவு 313(i)(ஆ)–ன் கீழ் வினவியபோது எதிரிகள் மேற்படி சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் பொய் என

கூறினார்கள். மேலும். எதிரிகள் தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை மற்றும் சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**<u>இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் அரசு தரப்பில், எதிரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் சம்பவத்தை தகுநிலை ஐயத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா என்பதேயாகும்</u>**

7. இவ்வழக்கில் கடந்த 03.06.2022ம் தேதி இரவு 23.00 மணிக்கு அ.சா.1 சூர்யாவும் அவருடைய தம்பி பார்த்திபனும் இருசக்கர வாகனத்தில், எதிரி 2 கவிதா என்பவரின் வீட்டை கடந்து செல்லும்போது அ.சா.1 சூர்யாவும் அவருடைய தம்பி பார்த்திபனையும் பார்த்து ஏன் இவ்வளவு வேகமாக போகிறீர்கள் என திட்டியதால், இருதரப்புக்கும் வாக்குவாதம் ஏற்பட்டதாகவும், இதன் தொடர்ச்சியாக 04.06.2022ஆம் தேதி மாலை சுமார் 16.30 மணிக்கு தேவஸ்தானம் கிராமத்தில் எதிரி 1 மஞ்சுநாதன் என்பவர் வீட்டினிடம் அ.சா.1 சூர்யாவை ஏண்டா தேவிடியாபையா என் அம்மாவை திட்டினாய் என்று அசிங்கமாக திட்டியதாகவும், எதிரி 2 அ.சா.1 சூர்யாவை இழுத்து கீழே தள்ளி கையால் அடித்தும், எதிரி 3 பிரகாஷ் ஓடி வந்து அ.சா.1 சூர்யாவை கையால் அடித்து காலால் எட்டி உதைத்து சொற்பகாயம் ஏற்படுத்தியதாகவும், எதிரி 1 அ.சா.1 சூர்யாவை பார்த்து ஆள்காட்டி விரலை காட்டி உன்னை ஒழிக்காமல் விடமாட்டேன் என மிரட்டல் விடுத்ததாக அரசு தரப்பில் எதிரிகளின் மீது குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

8. இவ்வழக்கில் முக்கிய சாட்சியான புகார்தாரர் மற்றும் காயமுற்ற சாட்சியான சூர்யா அரசு தரப்பில் அ.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அ.சா.1 சூர்யா அவரது நீதிமன்ற விசாரணையின்போது, " ஆஜர் எதிரிகளை தெரியும். சுமார் 4 வருடத்திற்கு முன்பு எங்கள் ஊரில் கங்கையம்மன் திருவிழா நடந்தது. அந்த கூட்டத்தில் யாரோ என்னை அடித்துவிட்டார்கள். அதில் எனக்கு முதுகில் காயம் ஏற்பட்டது. அதனால் நான் சிகிச்சைக்காக வாணியம்பாடி அரசு மருத்துவமனைக்கு சென்றேன். அங்கு போலிசார் விசாரித்தபோது சந்தேகத்தின் பேரில் எதிரிகளின் பேரை சொல்லிவிட்டேன். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது. அதில் என்ன

எழுதி உள்ளது என்று எனக்கு தெரியாது. " என அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக பிறழ் சாட்சியம் அளித்துள்ளார் என்பது புலனாகிறது.

9. வழக்கின் கேள்வியுற்ற சாட்சியான அ.சா.2 அம்மு தனது நீதிமன்ற விசாரணையின்போது, " அ.சா.1ஐ தெரியும். சுமார் 4 வருடத்திற்கு முன்பு எங்கள் ஊரில் கங்கையம்மன் திருவிழா நடந்தது. அந்த கூட்டத்தில் ஏதோ பிரச்சனை ஏற்பட்டது. அதில் யாருக்கு என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது " என அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக பிறழ் சாட்சியம் அளித்துள்ளார் என்பது புலனாகிறது.

10. வழக்கின் கண்ணுற்ற சாட்சியான அ.சா.3 ரமேஷ் தனது நீதிமன்ற விசாரணையின்போது, " என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது. இந்த வழக்கு விவரமும் எனக்கு தெரியாது. " என அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளார் என்பது புலனாகிறது.

11. வழக்கின் பார்வை மகசர் சாட்சியான அ.சா.4 ராஜேந்திரன் தனது நீதிமன்ற விசாரணையின்போது, " ஆஜர் எதிரிகளை தெரியும். எனது வீட்டு பக்கத்தில் உள்ளார்கள். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது. அந்த கையொப்பத்தை நான் போலிசாரிடம் எனது ஊருக்கு வந்து போனதற்காக போட்டுக்கொடுத்தேன். ஏதோ தகராறுக்காக வந்ததாக சொன்னார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள். " என சாட்சியம் அளித்துள்ளார். எதிரி தரப்பு குறுக்கு விசாரணையின்போது " போலிசாரிடம் வெள்ளை தாளில் கையொப்பம் போட்டேன் என்றும் அந்த கையொப்பத்தை அவருடைய வீட்டிடம் போட்டுக்கொடுத்தேன் என்றால் சரிதான் மற்றபடி வழக்கு விவரங்கள் தெரியாது " என அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளார் என்பது புலனாகிறது.

12. அரசு தரப்பில் பட்டியல் சாட்சிகள் 2, 5, 6, 8, 9, 10 ஆகியோர்கள் விசாரிப்பதிலிருந்து விலக்கப்பட்டுள்ளார்கள். அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள வழக்கின் புகார்தாரர் மற்றும் காயமுற்ற சாட்சியான அ.சா.1 சூர்யா, கேள்வியுற்ற

சாட்சியான அ.சா.2 அம்மு ஆகியோர்கள் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காத நிலையில் பிறழ் சாட்சியாக பாவிக்கப்பட்டு, இந்நீதிமன்றத்தின் அனுமதியுடன் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ததில் அரசு தரப்பு வழக்கை வலுசேர்க்கும் வகையில் எவ்வித சங்கதிகளும் வெளிக்கொணரப்படவில்லை. ஆகையால், அ.சா.1 மற்றும் அ.சா.2 வரையிலானவர்களின் சாட்சியம் அரசு தரப்பில் எதிரிகள் மீதான குற்றச்சாட்டை நிரூபிக்க உகந்தது அல்ல என இந்நீதிமன்றம் கருதுகிறது.

13. அ.சா.5 திரு.ராமமூர்த்தி, உதவி ஆய்வாளர் அவரது சாட்சியத்தில் வாணியம்பாடி அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் அ.சா.1ஐ விசாரித்து அ.சா.ஆ.4 புகார் வாக்குமூலத்தை பெற்று அ.சா.ஆ.5 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, சம்பவயிடத்தை பார்வையிட்டு அ.சா.ஆ.6 பார்வை மகஜர் மற்றும் அ.சா.ஆ.7 மாதிரி வரைபடம் தயார் செய்ததை குறித்தும், அனைத்து சாட்சிகளையும் தனித்தனியாக விசாரித்து, எதிரிகள் மாண்புமிகு மாவட்ட அமர்வு வேலூர் நீதிமன்றத்தில் முன்பிணை பெற்றதால் கைது செய்யவில்லை என்றும், அ.சா.1 க்கு சிகிச்சை அளித்த மருத்துவரை விசாரித்து அ.சா.ஆ.8 விபத்துப் பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றிதழைப் பெற்று, புலன் விசாரணை முடித்து இறுதி அறிக்கை தாக்கல் செய்ததைக் குறித்து சாட்சியம் அளித்துள்ளார் என்பது புலனாகிறது. புலன் விசாரணை அதிகாரியான அ.சா.5 திரு.ராமமூர்த்தி, உதவி ஆய்வாளர் நீதிமன்ற சாட்சியத்தை பரிசீலனை செய்கையில், அவரது கடமையை சட்டப்படியாக செய்ததை குறித்து சாட்சியம் அளித்துள்ளார் என்பது புலனாகிறது.

14. அ.சா.1 சூர்யா புகார் வாக்குமூலத்திலும், போலீசார் விசாரணையின்போதும், எதிரி 1 மஞ்சுநாதன் என்பவர் அ.சா.1 சூர்யாவை ஏண்டா தேவிடியாபையா என் அம்மாவை திட்டினாய் என்று அசிங்கமாக திட்டியும், எதிரி 2 அ.சா.1 சூர்யாவை இழுத்து கீழே தள்ளி கையால் அடித்தும், எதிரி 3 பிரகாஷ் ஓடி வந்து அ.சா.1 சூர்யாவை கையால் அடித்து காலால் எட்டி உதைத்து சொற்பகாயம் ஏற்படுத்தியதாகவும், எதிரி 1 அ.சா.1 சூர்யாவை பார்த்து ஆள்காட்டி விரலை காட்டி உன்னை ஒழிக்காமல் விடமாட்டேன்

என மிரட்டல் விடுத்ததாக கூறிவிட்டு, அதற்கு முற்றிலும் மாறாக, தனது நீதிமன்ற விசாரணையின்போது, அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக ஊர் திருவிழா கூட்டத்தில் யாரோ அடித்துவிட்டதில் முதுகில் காயம் ஏற்பட்டு மருத்துவமனைக்குச் சென்றதாக பிறழ் சாட்சியம் அளித்துள்ளார். மேலும், அதற்கேற்றார்போல், வழக்கு நிலுவையில் இருக்கும்போது எதிரிகளும், அ.சா.1ம் சமாதானம் ஆகிவிட்டதாக கொடுத்த 13.11.2025 ம் தேதி கு.வி.மு.ச பிரிவு 320ன் கீழ் குற்ற பல்வகை மனு எண் 3792/2025ன் கீழ் தாக்கல் செய்துள்ளார்கள். மேற்படி, மனுவானது இவ்வழக்கின் சில குற்றங்கள் சட்டப்படியாக சமரசம் தீர்த்துக்கொள்ள முடியாத குற்றங்கள் என்பதால் தள்ளுபடி செய்யப்பட்டது.

15. இவ்வழக்கில் புகார்தாரர் மற்றும் காயமுற்ற சாட்சியான அ.சா.1 சூர்யா அவரது சாட்சியத்தில் போலிசாரிடம் புகார் வாக்குமூலத்தில் என்ன எழுதி உள்ளது என்று தெரியாது என சாட்சியம் அளித்துள்ளதால் வழக்கின் மூல ஆதாரமான அ.சா.ஆ.4 புகார் வாக்குமூலமே சந்தேகத்திற்கு உள்ளாவதாலும், புகார்தாரர் மற்றும் காயமுற்ற சாட்சியான அ.சா.1 சூர்யா **ஊர் திருவிழா கூட்டத்தில் யாரோ அடித்துவிட்டதில் முதுகில் காயம் ஏற்பட்டு** மருத்துவமனை சென்றதாக பிறழ் சாட்சியம் அளித்துள்ளதாலும், கேள்வியுற்ற சாட்சியான அ.சா.2 அம்மு திருவிழாகூட்டத்தில் ஏதோ பிரச்சனை என்றும் அதில் யாருக்கு என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது என பிறழ் சாட்சியம் அளித்துள்ளதாலும், கண்ணுற்ற சாட்சியான அ.சா.3 ரமேஷ் என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது என்றும், இந்த வழக்கு விவரமும் எனக்கு தெரியாது என சாட்சியம் அளித்துள்ளதாலும், பார்வை மகசர் சாட்சியான அ.சா.4 ராஜேந்திரன் போலிசாரிடம் வெள்ளை தாளில் கையொப்பம் போட்டேன் என்றும் அந்த கையொப்பத்தை அவருடைய வீட்டிடம் போட்டுக்கொடுத்தேன் என சாட்சியம் அளித்துள்ளதாலும், அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள அ.சா.1 மற்றும் அ.சா.4 வரையிலானவர்கள் அரசு தரப்பு வழக்கை வலுசேர்க்கும் வகையில் சாட்சியம் அளிக்காத நிலையில், புலன் விசாரணை அதிகாரியான அ.சா.5ன் சாட்சியத்தை மட்டும் வைத்துக்கொண்டு, எதிரிகள் குற்றம் புரிந்தார்கள் என தீர்மானிக்க இயலாது என்பதாலும், அரசு தரப்பில் எதிரிகளின் மீது சுமத்தப்பட்ட இ.த.ச பிரிவுகள் 294(பி), 323, 506(1) ன் கீழான குற்றச்சாட்டுகள் அரசு

தரப்பில் நிரூபணம் செய்யப்படவில்லை என்று மேற்கண்ட பிரச்சனைக்கு அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக தீர்வு காணப்படுகிறது.

16. **முடிவாக,** இவ்வழக்கில் 1ம் எதிரியின் மீது இ.த.ச. பிரிவுகள் 294(பி), 506(i)–ன் கீழும், 2ம் எதிரியின் மீது இ.த.ச பிரிவுகள் 323–ன் கீழும், 3ம் எதிரியின் மீது இ.த.ச பிரிவுகள் 323–ன் கீழ் அரசு தரப்பில் எதிரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் தகுநிலை ஐய்யப்பாட்டிற்கு இடமற்ற வகையில் நிரூபணம் செய்யாததால் 1 முதல் 3ம் எதிரிகள் குற்றவாளிகள் இல்லையென முடிவு செய்து எதிரிகளை கு.வி.மு.ச. பிரிவு 248(1)ன் படி விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

17. இவ்வழக்கில் வழக்கு சொத்து இல்லை. எதிரிகள் கொடுத்துள்ள பிணை பத்திரத்தை மேல்முறையீட்டு காலத்திற்கு பின் ரத்து செய்து உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் பிழைநீக்கம் செய்து சரிபார்க்கப்பட்டு இன்று 2026–ம் ஆண்டு மார்ச் திங்கள் 27 ஆம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

(ஒம்/–கா.ஸ்ரீபதி)
நீதித்துறை நடுவர்,
வாணியம்பாடி.

**அரசு தரப்பு சாட்சிகள்**

| | | |
|---|---|---|
| 1 | அ.சா.1 | திரு. சூர்யா |
| 2 | அ.சா.2 | திரு. அம்மு |
| 3 | அ.சா.3 | திரு. ரமேஷ் |
| 4 | அ.சா.4 | திரு. ராஜேந்திரன் |
| 5 | அ.சா.5 | திரு.ராமமூர்த்தி, உதவி ஆய்வாளர். |

**<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்</u>**

| | | |
|---|---|---|
| 1. | அ.சா.ஆ.1 | 07.06.2022ஆம் தேதியிட்ட புகார்வாக்கு மூலத்தில் உள்ள கையொப்பம். |
| 2. | அ.சா.ஆ.2 | 13.11.2025 ஆம் தேதியிட்ட சமாதான மனு. |
| 3. | அ.சா.ஆ.3 | 07.06.2022 ஆம் தேதியிட்ட பார்வை மகசரில் உள்ள கையொப்பம். |
| 4. | அ.சா.ஆ.4 | 07.06.2022 ஆம் தேதியிட்ட புகார்வாக்குமூலம் |
| 5. | அ.சா.ஆ.5 | 07.06.2022 ஆம் தேதியிட்ட முதல் தகவல் அறிக்கை. |
| 6. | அ.சா.ஆ.6 | 07.06.2022 ஆம் தேதியிட்ட பார்வை மகசர் . |
| 7. | அ.சா.ஆ.7 | 07.02.2022 ஆம் தேதியிட்ட மாதிரி வரைபடம் . |
| 8. | அ.சா.ஆ.8 | 04.06.2022 ஆம் தேதியிட்ட சூர்யாவின் விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று. |

**<u>எதிரி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றுப் பொருட்கள்</u>** – இல்லை.

**<u>எதிரி தரப்பு சான்றாவணம்</u>** – இல்லை

**<u>குறிப்பு</u>**

1) எந்த சாட்சியும் 3 முறைக்குமேல் நிறுத்தி விசாரிக்கப்படவில்லை.

2) வழக்கு விசாரணையின் போது எதிரி பிணையில் இருந்தார்.

3) முடிவு காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.

/-கா.ஸ்ரீபதி)

நீதித்துறை நடுவர்,
வாணியம்பாடி.

//உண்மை நகல்//

SRIPATHI K

JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI
Digitally signed by SRIPATHI K
Location: TIRUPATHUR

நீதித்துறை நடுவர்,
வாணியம்பாடி.